ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 44-T (OS)**

**Code No. : 44-T (OS)**

**ಶಿಕ್ಷಣ – II**

**EDUCATION – II**

# ಶೈಕ್ಷಣಿಕ ನಿರ್ವಹಣೆ ಮತ್ತು ಶಾಲಾ ಸಂಘಟನೆ

# EDUCATIONAL MANAGEMENT AND SCHOOL ORGANISATION

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**

**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 30. 06. 2015 ]
Date : 30. 06. 2015 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ]
Time : 2.00 P.M. to 5.00 P.M. ]

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பகுதி – A

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மூன்று பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும். அக்கேள்விகளுள்ள பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : 4 × 10 = 40

1. a) பள்ளி நிர்வாகத்தின் ஜனநாயகக் கொள்கைகள் (Democratic principles) யாவை ? அவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றி விளக்கவும். 6

   b) 'பள்ளி சிறப்பாக செயல்படுவதற்கு பள்ளி நிர்வாகம் அவசியம்' இவ்வாக்கியத்தை நியாயப்படுத்துக. 4

2. a) 'தொடக்கப்பள்ளி நிர்வாகத்திற்கு BEO யின் பங்கு தேவை' ஏன் ? 6

   b) கருநாடகத்திலுள்ள தொடக்கப்பள்ளி நிர்வாக முறையைப் பற்றி எழுதவும். 4

3. a) 'வழிபாடு என்பது ஒரு புனிதமான சக்தியுடன் உண்டாகும் இணைப்பு அல்லது உரையாடல்' (Pryaer is the union or dialogue with a divine power) இவ்வாக்கியத்தை ஆய்வு செய்யவும். 6

b) பள்ளியில், கற்பித்தல் முறையை நிர்வகிக்கும் போது கருத்தில் கொள்ளத்தக்க குறிப்புகள் யாவை ? 4

4. a) சிறந்த வகுப்பறையின் தன்மைகளைத் தெளிவுபடுத்தவும். 6

b) கரும்பலகையைப் பயன்படுத்தும்போது மனதில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை ? 4

5. a) பள்ளியில் நிர்வகிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் யாவை ? அவற்றைப் பொருள்பட வகைப்படுத்தவும். 6

b) தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் நியமனத்தில் தெளிவுத்தன்மை உண்டாக, அரசாங்கம் எத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பற்றி கலந்துரையாடவும். 4

6. a) ஒரு தலைமை ஆசிரியரிடம் (Head teacher) இருக்க வேண்டிய பண்புகள் யாவை ? 6

b) 'பள்ளி நிர்வாக அமைப்பில் தலைமையாசிரியர் (Headmaster) மூலக்கல்லாகத் (Foundation stone) திகழ்கின்றார்' இவ்வாக்கியத்தை ஆய்வு செய்யவும். 4

7. a) ஆசிரியர்களின் வேலைச் சுமையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ? எவையேனும் இரண்டினைப் பற்றி விளக்கவும். 6

b) 'குழந்தையின் கற்ற ல், பாராட்டுகளும் தண்டனைகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை' - எப்படி ? கலந்துரையாடவும். 4

## பகுதி – B

II. கீழ்க்கண்ட ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் :

7 × 5 = 35

8. கல்வி மேலாண்மையின் (Educational management) செயல்முறையை விவரி.

9. கல்வி நிர்வாகத்தில் மனிதத் தொடர்புகள் அவசியமானது. ஏன் ? தெளிவுபடுத்தவும்.

10. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் ( DPEP ) முக்கிய குறிக்கோள்களை விவரி.

11. கல்வி நிர்வாகத்தில் மத்திய அரசின் பங்கு மிகவும் முக்கியமானது மற்றும் முடிவெடுக்கும் தன்மையுடையது. இதனைத் தெளிவுபடுத்தவும்.

12. 'நிறுவன நிலைத் திட்டமிடுதல்' (Institutional planning) என்றால் என்ன ? நிறுவன நிலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கான வழிமுறையை விரிவாக விளக்கவும்.

13. ஒரு மாதிரி தொடக்கப்பள்ளியின் சதுர வடிவமைப்புத் திட்டத்தை (Square shaped building plan) வரையவும். கீழ்க்காண்பனவற்றை இத்திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.

    (i) அசெம்ப்ளி ஹால் (ii) தலைமையாசிரியரின் அறை

    (iii) ஆய்வகம் (iv) பள்ளித் தோட்டத்திற்கான இடம்

14. பள்ளியில் பதிவேடுகளை நிர்வகித்தல் மிக முக்கியமானது. ஏன் ? கலந்துரையாடவும்.

15. DDPI (நிர்வாகம் ) இன் அதிகாரங்களும் கடமைகளும் யாவை ?

16. கால அட்டவணையின் (Time table) வகைகள் யாவை ? அவை ஒவ்வொன்றையும் விளக்கவும்.

17. ஆசிரியர் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளும் வழிமுறைகளும் யாவை ?

## பகுதி – C

III. கீழ்க்காணும் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும் :

$5 \times 3 = 15$

18. மேலாண்மை மற்றும் நிர்வாகம் - இதனைத் தெளிவுபடுத்துவதற்கு ஏதேனும் மூன்று வேறுபாடுகளைக் குறிப்பிடவும்.

19. 1993 க்குப் பிறகு நிறுவப்பட்ட DIET களின் செயல்பாடுகள் யாவை ?

20. 'பள்ளி நூலகத்தில் அறிவின் கருவூலம் உள்ளது' - இவ்வாக்கியத்தை நியாயப்படுத்தவும்.

21. நிறுவனத்தின் நிலை திட்டத்தில் (Institutional Planning) ஓர் ஆசிரியரின் பங்கு யாது ?

22. பள்ளியின் வெவ்வேறு நிதியுதவி மூலங்கள் யாவை ?

23. கண்காணிப்பு (Supervision), பார்வையிடுத ருந்து (Inspection) எவ்வாறு வேறுபடுகிறது ?

24. நல்லொழுக்கம் பற்றிய நவீன கருத்துருவாக்கத்தின் பொருளை எழுதவும்.

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வோர் வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும்.

10 × 1 = 10

25. "திறமையான நிர்வாகம் இல்லையென்றால் எல்லாத் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிலவும் நடைமுறைகள் தோல்வியடையும்" இதைக் கூறியது யார் ?

26. 'Boss' மற்றும் 'Leader' சொற்களின் பொருளை எழுதவும்.

27. DSERT எந்த ஆண்டில் நிறுவப்பட்டது ?

28. 1976 ஆம் ஆண்டில், அரசியல் சட்ட அமைப்பில் கல்வி எந்த பட்டிய ல் இணைக்கப்பட்டது ?

29. பள்ளியின் மிக முக்கியமான மற்றும் அடிப்படை நோக்கம் யாது ?

30. பள்ளியிலுள்ள எந்தப் பொது அறை வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது ?

31. பள்ளிக் கட்டிடத்தை அமைப்பதற்காக, அமைக்கக்கூடிய வடிவமைப்புகளைக் குறிப்பிடவும்.

32. அரசு ஊழியர்கள் எத்தனை நாட்கள் தற்செயல் விடுப்பு எடுத்துக்கொள்ளும் உரிமையுள்ளது ?

33. பள்ளி மற்றும் கல்வித் துறைக்கிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துபவர் யார் ?

34. கால அட்டவணை (Timetable) என்றால் என்ன ?